**முதியோர் சமூக பாதுகாப்பு நிதியம் - 2023**

------------------------------------------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

முதியோர் சமூக பாதுகாப்பு நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதயம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக காணப்படுவதுடன், தொடர்ந்தியங்கும் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு

செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் நிதியம் செயற்பட்டிருந்தது என்பதும், வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தன என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களுக்கு மாத்திரம் அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை

பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ''முறையாக திட்டமிடப்பட்ட'' உள்ளகக் கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவனத்தினால் பேணிச் செல்லல் அவசியமாகவுள்ளது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலையான வைப்புக்களுக்கான வட்டித் தொகையில் 5 சதவீதத்திற்கான தடுத்து வைத்தல் வரி கழித்து பெற வேண்டிய நிலையான வைப்புக்கான வட்டி கணிக்கப்படாமையினால் ரூபா 12,634,663 தொகையினால் மீளாய்வாண்டிற்கான வருமானம் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | சரி செய்வதற்குத் தேவையான சீராக்கல்கள் அடுத்த நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலையான வைப்புக்களுக்கான வட்டி சரியாக கணித்து கணக்கீடு செய்ய வேண்டும். |

## 1.6. பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முதியோர் சமூக பாதுகாப்பு நிதியத்தத்திற்காக முதியோர் கொடுப்பனவில் இருந்து அறவீடு செய்யப்பட்ட தொகை பிரதேச செயலகங்களினால் மீண்டும் நிதியத்திற்கு வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் கடந்த ஆண்டிற்குரிய பெற வேண்டிய ரூபா 1,682,400 இற்கான தொகை மீளாய்வாண்டு இறுதி அளவிலும் குறிப்பிட்ட பிரதேச செயலகங்களில் இருந்து நிதியத்திற்கு வழங்கியிருக்கவில்லை. | நிலுவைத் தொகைகளை பெற்றுக் கொள்வதற்கு மேலும் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | பிரதேச செயலகங்களினால் அறவிடப்பட்ட பணம் விரைவாக நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியின் மூலம் நிறுவப்பட்டிருந்த இலங்கை சனநாயக | மீளாய்வாண்டிற்கான பாதீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்துடன் திறைசேரியின் அங்கீகாரம் பெறுவதற்காக தேசிய | 2024 ஆம் ஆண்டிற்கான பாதீடு, அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | |
|---|---|
| சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 877(1)(இ) | பாதீட்டு பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு அதன் பிரதியொன்று அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன்படி செயற்பட்டிருக்கவில்லை. |

## 1.8 முதலீட்டு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கு அறிமுகப்படுத்தியிருந்த 2021 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி திருத்த சட்டத்தின் அட்டவணை III இன் படி 2021 ஏப்ரல் 01 ஆம் திகதியின் பின்னர் சங்கம் ஒன்றிற்காக அட்டுறுவாகிய அந்த சங்கத்தினால் உழைக்கப்பட்ட வட்டி வருமானம் வரிவிடுதலை அளிக்கப்படுகின்றது. அதன் படி முதியோர் சமூக பாதுகாப்பு நிதியத்தின் நிலையான வைப்புக்கான வட்டியில் இருந்து வங்கியினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 5 சதவீத வரித் தொகையை விடுவித்துக் கொள்வதற்கு முடியுமாக இருந்த போதிலும், அந்த உரிமையை பெற்றுக் கொள்வதற்கு நிதியத்தின் முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன்படி மீளாய்வாண்டின் போது முதிர்ச்சியடைந்திருந்த ரூபா 2,941,701,428 தொகைக்கான நிலையான வைப்புக்கள் மீதான கிடைத்த வட்டித் தொகையில் ரூபா 39,053,431 இற்கான தொகையொன்று நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக உரிய சட்ட நிலைமை பற்றி தகவல்களை கண்டறிந்து விரைவாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட்டு உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 99,401,346 இற்கான மிகை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 120,672,455 தொகை ஆக இருந்தது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 21,271,109 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. செயற்திட்டத்தின் செலவுகள் அதிகரத்தமை இதற்கு பிரதானமான காரணமாக இருந்ததென அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குறைந்த வருமானமுடைய முதியோர் சமூகத்தில் விஷேட மற்றும் அவசர சந்தர்ப்பங்களின் போது சுகாதாரம் சார், போசாக்கு மற்றும் பாதுகாப்பு செலவுகள் மேற்கொள்ளல் மற்றும் முதியோர்களின் நலனோம்பு குறிக்கோள்களை நோக்குடன் முதியோகர் கொடுப்பனவு பெற்றுக் கொள்ளும் நலன்பெறுவோர்களின் ஒரு நலன்வோரிடம் ஒரு மாதத்திற்கு ரூபா 100 வீதம் முதியோர் சமூக கொடுப்பனவிலிருந்து அறவீடு செய்து முதியோர் பாதுகாப்பு நிதியம் நிறுவுவதற்காக 2016 செப்தெம்பர் 07 திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் படி நிதியம் நிறுவப்பட்டிருந்த 2016 ஆண்டு முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை ஒரு முதியோரிடம் ரூபா 100 வீதம் முதியோர் கொடுப்பனவிலிருந்து அறவீடு செய்து ரூபா 3,870.2 மில்லியன் தொகை நிதியம் திரட்டியிருந்தது. நிதியத்தின் 10 கருமங்களை அடிப்படையாகக் கொண்டு சேகரிக்கப்பட்டிருந்த இந்த நிதியத்தின் மூலம் 2016 முதல் 2018 வரை எதுவித நிகழ்ச்சித் திட்டமும் செயற்படுத்தியிருக்கவில்லை. அதன் படி 7 வருடங்களுக்காக மொத்த பங்களிப்புத் தொகை ரூபா 3,870.2 மில்லியன் தொகையாக இருந்ததுடன் அந்த காலப் பகுதிக்கான நலனோம்பு செலவுகள் ரூபா 1468.6 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. எனினும் முதலீடு ரூபா 3546.9 மில்லியன் தொகை ஆகும். அது சதவீதமாக நூற்றிற்கு 91.6 ஆகும். அதன்படி இந்த நிதியத்தின் குறிக்கோள் முதியோர்களின் நலனோம்பு விடயங்களுக்காக நிதியத்தை பயன்படுத்தல் போதியளவாக காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | நாட்டில் நிலவிய சமூக, பொருளாதார, அரசியல்சார் காரணங்களினால் எதிர்பார்த்த விளைவுகள் நெருங்குவதற்கு முடியாமல் போனது என. | நிதியம் நிறுவிய குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்வதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 இன் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 5.4.4 (i) இன் பிரகாரம் ஏற்றுக்கொள்ளக் கூடிய முற்பணம் செலுத்தும் பாதுகாப்பு முறி ஒன்று சமர்ப்பிப்பதன் மூலம், ஒப்பந்தத் தொகையில் நூற்றிற்கு இருபது (20%) உச்சமட்ட அளவு முற்பணம் என 2022 மார்ச் 28 ஆந் திகதி மற்றும் 2022 மே | முற்பணத் தொகை ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்படுவது அப்போது நாட்டில் நிலவிய பொருளாதார நிலையற்ற தன்மையின் மீது செயற்திட்டம் இடைநிறுத்தப்படாமல் தடுக்கும் குறிக்கோளுடன் டயில், கழிவறை உடல் ஆரோக்கிய உபகரணங்கள் மற்றும் பொருத்துக்கள் மற்றும் | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| 18 திகதிகளில் ரூபா 58,806,933 இற்கான தொகையொன்று முற்பணம் என விடுவிக்கப்பட்டிருந்தது. எனினும் அதற்கு மேலதிகமாக மேற்கூறிய முற்பணத் தொகையிலிருந்து 2022 திசெம்பர் 28 திகதியில் உள்ளவாறு ரூபா 41,600,046 தொகை தீர்த்திருக்காத போதிலும் மீண்டும் 2022 திசெம்பர் 28 திகதி ரூபா 35,949,264 இற்கான தொகையொன்று பண்டங்களுக்கான முற்பணத் தொகையென விடுவிக்கப்பட்டிருந்தது. 2024 ஜனவரி 29 திகதி அதாவது கணக்காய்வு சந்தர்ப்பமளவிலும் மேற்கூறிய பணம் விடுவிக்கப்பட்டு ஒரு வருடத்தை மிஞ்சிய காலம் கடந்திருந்த போதிலும் அந்த முற்பணத் தொகையை பயன்படுத்தி அதற்குரிய வேலை விடயங்களுக்கான வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. முற்பணத் தொகை வழங்கி 05 மாதங்களுக்கு பின்னர் அந்தப் பணத்திலிருந்து ஒரு பகுதியை பயன்படுத்தி முதலாவது டயில் இருப்பொன்று 2023 ஜூன் 02 திகதி கொள்வனவு செய்திருந்தது. பின்னர் அவ்வப்போது டயில் கொள்வனவு செய்திருந்ததுடன், இறுதி டயில் இருப்பு 2024 ஜனவரி 05 திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியாகிய 2024 ஜனவரி 29 திகதியளவில் டயில்களில் அதிக எண்ணிக்கை ஒன்று பயன்படுத்தப்படாமல் குவிக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. அதன்படி ஒப்பந்தக்காரரினால் மீதியாகிய ரூபா 18,369,827 இற்கான முற்பணத் தொகையொன்று ஒரு வருடத்தை விட மிகையான காலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | மின்உயர்த்தி ஆகிய விடயங்கள் கொள்வனவு செய்வதற்கு தேவையான நிதி வசதிகள் பெற்றுக் கொள்வதற்கு மாத்திரமே என. | |
| (ஆ) 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.13.3 பிரிவிற்கு இணங்க நிச்சயமற்ற ஏற்பாடுகள் ஒப்பந்த தொகையிலிருந்து 10 சதவீதத்தை மிகைக்காது இருக்க வேண்டிய போதிலும் உடன்படிக்கையின் படி நிச்சயமற்ற ஏற்பாடுகள் 7 சதவீதம் வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருந்த போதிலும் அதற்கு முரணாக 38.79 சதவீதத்தினால் ஒப்பந்த விலை அதாவது ரூபா 115,860,352 தொகையினால் அதிகரிப்பதற்கு அமைச்சின் பெறுகைக் குழு அங்கீகாரம் வழங்கியிருந்தது. | எதிர்பாராதவாறு நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நிலையற்ற தன்மை காரணமாக CIDA நிறுவனத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலை சூத்திரத்தின் படி கொடுப்பனவு செய்ய நேரிட்டிருந்தமையால் உசாத்துணை நிறுவனத்தின் பரிந்துரைக்கப்பட்ட விலை முரண்களுக்காக கொடுப்பனவுகள் அமைச்சின் பெறுகைக் குழு அங்கீகரித்திருந்தது என. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.3 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முதியோர் சமூக பாதுகாப்பு நிலையத்தின் ஏற்பாடுகள் மூலம் கதிர்காமம் முதியோர் விடுதி நிர்மாணிப்பதற்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 298,684,667 இற்கான வரியின்றிய தொகையொன்றிற்கு சாட்டப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் இந்த நிர்மாணவேலை 2022 மார்ச் 15 திகதி ஆரம்பிக்கப்பட்டு 2023 செப்தெம்பர் 12 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. முதலாவது காலநீடிப்பு 2023 செப்தெம்பர் 12 திகதி முதல் 2023 நவம்பர் 27 திகதி வரை வேண்டப்பட்டிருந்ததுடன் அதனை 76 நாட்களினால் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. எனினும் அத் திகதியில் வேலை பூர்த்தி செய்யப்படாமையால் இரண்டவாது காலநீடிப்பு 2024 மார்ச் 31 திகதி வரை 125 நாட்கள் ஒப்பந்தக்காரரினால் வேண்டியிருந்த போதிலும் முதியோர் செயலகத்தினால் 2024 ஜனவரி 31 திகதி வரை 65 நாட்களுக்கான காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. அதன்படி ஒப்பந்தகாலம் முடிவடைந்திருந்த போதிலும் நிர்மாண வேலையின் பாதியளவேனும் அத் திகதியில் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | இச் செயற்திட்டம் கொவிட் இற்கு பின்னராக தாக்கங்கள், எரிபொருள் தட்டுப்பாடு தொடர்ச்சியான மின்சார துண்டிப்பு, இடையிடையே விதிக்கப்பட்ட பிரயாண வரையறை மற்றும் பொதுமக்கள் கலவரம் போன்ற அதிவிஷேட நிலைமைகள் ஏற்பட்டிருந்த காலப் பகுதியில் செயற்பட்டிருந்தமையால் செயற்திட்டத்திற்கு அது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியதுடன் அவற்றை கணிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட செய்முறை ஒன்று காணப்படாமையால் அதன்மூலம் ஏற்பட்டிருந்த தாமதங்களை கவனத்தில் எடுக்காமல் விடுவதற்கு நேரிட்டது என. | செயற்திட்டம் குறிப்பிட்ட காலத்தில் உடன்படிக்கைக்கு இணங்க விரைவாக நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |